Reg. No. 1-M.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

NOVEMBER 4, 1930.

ந. 44.] மதராஸ் : செவ்வாய்கிழமை மாலை, 1930-ம்௵ நவம்பர்௴ 4௳. [PRICE, 6 *pies*

கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

லா டிபார்ட்மென்ட்.

(ஜெனரல்.)

விளம்பரங்கள்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம்௵ அக்டோபர்௴ 23௳ (மிஸலேனியஸ், 4471-ம் ந. கவர்ன்மென்ட் உத்தரவு).

௺. 854.—சென்னபட்டணம் 1924-ம்௵த்து 3-வது ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள 1911-ம்௵த்திய சென்னபட்டணத்து கொடைக்கூலி வண்டி ஆக்ட் 1-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (i) அடையாளமிட்ட பகுதியுடன் சேர்த்திருக்கும் விலக்கு நிபந்தனையின்படி, ஷை ஆக்டில் கண்ட நிபந்தனைகளை இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள சிவகாசி மியுனிஸிபல் விஸ்தீர்ணத்துக்கு 1931-ம்௵ மே௴ 1௳ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது வியாபிக்கும்படிச் செய்ய உத்தேசித்திருக்கிறதென்று இதனால் அறிக்கையிடப்படுகிறது, ஷை ஆக்டை மேலே உத்தேசித்திருக்கிறபடி வியாபிக்கச் செய்வதற்கு ஆட்சேபனையுள்ள நபர்கள் இந்த விளம்பரம் பிரசித்தம் செய்யப்பட்டதிலிருந்து இரண்டு மாதத்துக்குள்ளாக இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தங்களுடைய ஆட்சேபனைகளைத் தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாகிறது.

பூ. ராம ராவ்,
கவர்ன்மென்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம்௵ அக்டோபர்௴ 24௳.

௺. 856.—1923-ம்௵ மார்ச்௴ 20௳யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா (ஜெனரல்) டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் ௺. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம்௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளில், (1914-ம்௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம்௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் செய்ய உத்தேசிக்கும் திருத்தத்தின் அடியிற்கண்ட மசோதாவானது - அதனால் வெகுசாய் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தெரியும்பொருட்டு இதனால் பிரசித்தம் செய்யப்படுகிறது. மேலும், ஷை மசோதா 1930-ம்௵ டிஸெம்பர்௴ 1௳ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், அந்த மசோதா விஷயமாய் மேலேகண்ட தேதிக்கு முன் எந்த நபரிடமிருந்தாகிலும் வந்துசேரக்கூடிய எவையேனும் அபிப்பிராயக்குறிப்புகள் அல்லது ஆட்சேபனைகளைப்பற்றி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யோசிப்பார்களென்றும் இதனால் அறிக்கையிடப்படுகிறது :—

மசோதா திருத்தம்.

ஷை விதிகளைச் சேர்ந்த 19-A விதியில் கண்ட கடைசி நான்கு வாக்கியங்களுக்குப்

பர்த்தியாக அடியிற்கண்ட வாக்கியங்களை அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன :—

“சென்னை ராஜதானிப்பட்டணத்தில் அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் - பொலீஸ் ஸர்ஜனால் பரீட்சை செய்துபார்க்கப்பட்ட பிறகு இந்த விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும் L நமூனாப்படி ஒரு (மெடிகல்) வைத்திய ஸெர்டிபிகேட்டையுங்கூட ஹாஜர்ப்படுத்தவேண்டும். ஷை நபர் - லைஸென்ஸ் கொடுக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ளும்போதாவது, இதற்குமுன் அவர் அப்படிப்பட்ட ஸெர்டிபிகேட்டை ஹாஜர்ப்படுத்தியிராதபட்சத்திலே, தமக்குக் கொடுக்கப்பட்டோ அல்லது புதுப்பிக்கப்பட்டோ இருக்கும் யாதொரு லைஸென்ஸைப் புதுப்பித்துக் கொடுக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ளும்போதாவது ஷை வைத்திய ஸெர்டிபிகேட்டை ஹாஜர்ப்படுத்தவேண்டும். வண்டி ஓட்டுவதற்கான லைஸென்ஸ் வைத்திருக்கும் அப்படிப்பட்ட யாதொரு நபர் மோடார் வண்டி ஓட்டுவதற்குத் தகுதியான தேகதிடனுள்ளவராயில்லை யென்று சந்தேகப்படுவதற்கு நியாயமிருப்பதாக பொலீஸ் கம்மிஷனர் அபிப்பிராயப்படுகிறபட்சத்திலே, பொலீஸ் ஸர்ஜனைக்கொண்டு மறுபடியும் வைத்திய பரீட்சை செய்துகொள்ளும்படி ஷை நபருக்குக் கட்டளையிட பொலீஸ் கம்மிஷனருக்கு அதிகாரமுண்டு. மேலும், அவர் அந்த அபிப்பிராயத்தை எழுத்துமூலமாகப் பதியவேண்டும். மேலேகண்டபடி வைத்திய பரீட்சை செய்துகொள்வதற்காவது மறுபடியும் அப்படிப்பட்ட பரீட்சை செய்துகொள்வதற்காவது 2 ரூபாய் கட்டணம் செலுத்தத்தக்கதாகும்.”

ஏ. எப். டபில்யு. டிக்ஸன்,
கவர்ன்மென்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.